1978 செப்டம்பர் 13]

*திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 3 இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள குறுவை நெல்லை பூச்சிகள் தாக்கியிருக்கின்றன. மருந்துகள் கிடங்கிலே வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நோட்டீஸ்கள் அச்சடித்து ஒட்டப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்கு அடிக்கப்படுகின்ற மருந்துகள் தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்றன. அந்த மருந்துகளைச் சாப்பிட்டுவிட்டு பூச்சிகள் கொழுத்துப்போய், பயிர்களைத் தின்றுகொண்டிருக்கின்றன. எனவே அரசுத் துறையிலேயே உத்தரவாதமான மருந்துகளைத் தயாரிக்க அரசு முன் வருமா என்பதையும், தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்ற மருந்துகளிலே வீரியம் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டிலே நடவு செய்த குறுவைப் பயிரில் ஏறத்தாழ 20,000 ஏக்கர் இது போன்று பூச்சித் தொல்லைக்கு உள்ளாகி இருக்கின்றன. அவைகளையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு மத்திய அரசின் திட்டத்தின் கீழாக இன்று தஞ்சை மாவட்டத்தில் 6,300 ஏக்கரில் மருந்து தெளிக்கும் முறையை வேளாண்மைத்துறை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகிறது. மேலும் ஏதோ பழைய பூச்சி மருந்துகளை வைத்துக் கொண்டு அதைத் தெளிப்பதால் அங்கே புழுக்களும், பூச்சிகளும், அதைச் சாப்பிட்டுவிட்டு பெருத்து விடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து சரியல்ல. அதற்கு மாறாக நல்ல மருந்துகள் பூச்சிகள் சாகும் மருந்துகள்தான் வேளாண்மைத் துறை மூலம் கொடுக்கிறோம். புதிய மருந்துகள் நம்மிடத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எ) குமரி மாவட்டம் நெய்யாறு இடது கரை கால்வாயில் தண்ணீர் விடாமை.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாயில் கேரள அரசு தண்ணீர் விடாததால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பயிராகாமலும், பயிரானவை தீய்ந்து போகும் நிலைமை பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நெய்யாறு பாசனத் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டபோது, வாய்க்காலின் வடிவமைப்பு, கேரளப்பகுதிக்கு வினாடிக்கு 450 கன அடியும், தமிழ்நாட்டிற்கு வினாடிக்கு 150 கன அடியும் நீர் வழங்குவதற்கு

ஒப்புக்கொள்ளப்பட்டது. இது கேரள அரசிடமிருந்து தமிழக அரசிற்கு வந்த நெய்யாறு பாசனத் திட்டத்திற்கான வரை முறைகள் பற்றிய வரைவு விதிகளிலும், கேரள அரசால் உறுதி செய்யப்பட்டது. கொல்லங்கோடு தலைமதகில் விநாடிக்கு 150 கன அடி இயல்பாக நீர் வழங்குவதை, விதிமுறைகள் அத்தியாயம் ஒன்றிலுள்ள 2-வது பிரிவின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைக்கு கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

2. 1978-79 ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி கிளை வாய்க் கால் பாசனத்திற்காக 1-6-1978 அன்று திறந்துவிடப்பட்டது. விநாடிக்கு சுமார் 80 கன அடி முதல் 100 கன அடி வரை மட்டுமே ஜூலை மாதம் வரை நீர்வரத்து இருந்தது. எனவே, வாய்க்காலில் விடப்பட்ட தண்ணீரைச் சிறந்த முறையில் பயன் படுத்த முறை பாசனம் (Turn System) கையாளப்படுகிறது. பாசனக் குறைவால் பயிரானவை தீய்ந்து போனதாகத் தகவல் ஏதும் இல்லை. நிர்ணயிக்கப்பட்ட அளவாகிய விநாடிக்கு 150 கன அடி தண்ணீரை கன்னியாகுமரி கிளை வாய்க்காலில் விடக் கோரி கேரள அரசை இந்த அரசு வற்புறுத்தியுள்ளது.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, இங்கே கொடுக்கப் பட்டு இருக்கும் விவரம் தவறு. சுமார் 80 கன அடி முதல் 100 கன அடி வரை மட்டுமே ஜூலை மாதம் வரை நீர் கொடுக்கப் பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதத்தில் நானே நேரில் போய் பார்த்தேன். அங்கே இயல்பாகக் கிடைக்கவேண்டிய முழுத் தண்ணீரை கேரள அரசு கொடுக்காததால் கடைகோடி பகுதிகளில் நூற்றுக்கணக்கான நிலங்கள் பயிர் செய்ய முடியாமல் இருக்கின்றன. ஏற்கனவே வைக்கப்பட்ட நெல் பயிர்கள் தீய்ந்து போய் இருக்கின்றன: இங்கே கொடுக்கப்பட்டு இருக்கும் அறிக்கை தவறாக அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அதைத் தீவிரமாக ஆலோசித்து நமக்குக் கிடைக்க வேண்டிய 100 கன அடித் தண்ணீரை கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்படி 150 கன அடி தண்ணீர் கிடைக்க வேண்டும். அதில் இப்போது 80 முதல் 100 கன அடி தண்ணீர் கிடைத்து இருக்கிறது. டர்ன் சிஸ்டம் மூலமாக அங்கே தண்ணீர் சிறந்த முறையில் எல்லோருக்கும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இது தவறான தகவலாக இருந் தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அது சரிப் படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.